செய்தித் தாளாகப் பதிவுபெற்றது. வெள்ளிக்கிழமைதோறும் வெளிவருவது

உ
சிவமயம்

# இந்துசாதனம்

சைவபரிபாலனசபை வெளியீடு. பிரதி விலை: சதம் 15

ஆரம்பம்: விரோதி௵ (1889) ஆவணி மீ 28உ, அச்சகம்: சைவப்பிரகாசயந்திரசாலை, 450 காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356

புத்-அக] யாழ்ப்பாணம் சௌமிய ௵ தை மீ ௨௨ வெள்ளிக்கிழமை (16-1-1970) [இல-௪0

# ஷண் மத தெய்வ வழிபாடு

——:0:——

## காஞ்சீபுரம் ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள்

[தென் இந்தியாவில் ஷண் மத ஒருமைப்பாட்டிற்காகக் கூட்டப்பெற்ற ஷண் மத மகாநாடு வெகு பிரசித்தமானது. குரு மகாசந்நிதானமவர்கள் சைவத்தில் ஷண்மத வழிபாடும் அடங்கியிருக்கின்றது என்பதை "கல்கி" (6-7-69) இதழில் சிறப்புற விளக்கியருளினார்கள். அவ் விளக்கம் யாவர்க்கும் இன்பமளித்தது. மகாசந்நிதானத்தின் திருவருள் மாண்பையும் எடுத்துக் காட்டி அன்னாரைத் தரிசிக்கும் ஆர்வத்தைத் தூண்டியது. திருவருளினால் குருமகாசந்நிதானம் வருகை புரிந்தருளியமை மட்டிலா மகிழ்ச்சி தருவதனால் அக் கட்டுரையை இங்குப் பிரசுரிக்கின்றோம்.]

அண்மையில் சென்னையில் ஷண்மத மாநாடு நவதினங்களில் நவீன ரீதியில் புராதன சம்பிரதாயம் வழாமல் உயரிய தலைவர்களில் அறிஞர் சொற்பொழிவுகள் முதலியவற்றோடு, எங்கும் என்றும் நடவாத சிறப்போடு உலகறிய நடைபெற்றது.

அஃது அவசியமா? இக் கேள்வி வைதிகாசாரம உடையவர்களை நோக்கின் எழக் கூடியதே இக்காலத்தில் மக்க நாஸ்திகர்களையும ஆஸ்திகருள்ளும் பேத புத்திமான்களையும் நோக்கின் இந்தக் கேள்வி அநாவசியமேயாகும்.

ஷண்மதம் எனினும் அறுசமயம் எனினும் ஒன்றே 'அறுசமயம்' எனப்படுவன பல இருக்கின்றன. சமயங்களுக்குள் ஆறாறாக நால்வகை உண்டு அவற்றுள் வைதிகம் அல்லாதனவும் வைதிகமும் அடங்கும். அத்தொகுப்புக்குள் இந்த ஷண்மதம் இல்லை. ஆயினும் ஷண்மத தேவதைகளை வழிபடும் வழக்கமுடைய சமயங்கள் அவற்றுள் அடங்குவனவே.

சமயம் எல்லாவற்றையும் கடந்தது சமயாதீதம். அச்சமயாதீதப் பரம்பொருள் பரமசிவம். இப் பெயரைக் கேட்டவுடன் சைவம் என்னும் ஒரு திறச் சமயத்தின தெய்வத்தையே உணர்த்துவதாக நினைப்பர் பலரும். அந்நினைப்பு சமய ஞானம் முறைபாகப் பெறுத் துறையைக் காரணமாகக் கொண்டது. 'சைவ சித்தாந்தம்' எனப்படுவது மூற் குறுத்த நால்வேறு அறுவகைச் சமயங்களுள் ஒன்று அன்று. இவ்வுண்மையை உமாபதி சிவம் அருளிய 'சங்கற்ப நிராகரணம்' உணர்த்தப்பெறும் அறிவுடையார்க்கு எளிதின் அறிய இயலும். இச் சமயாதீதமாகிய பரமசிவம் வேதாகம முடிபாக உணர்த்தப்பெறும் பரப்பிரம்மம் அன்றி மற்றில்லை. அப்பரமசிவத்தைத தனது முடிபாகக் கொண்டதும், சைவம் என்ற பெயரால் அறிவிக்கப்படுகின்றது சமயாதீதம் ஆயினும் அதை ஒரு சொல்லால் அறிவித்துத் தானே புலப்படுத்த வேண்

வளர்ச்சி 2-ஆம் பக்கம்

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

வாயானை மனத்தானை
மனத்துள் நின்ற
கருத்தானைக் கருத்தறிந்து
முடிப்பான்றன்னைத்
தூயானைத் தூவெள்ளை
யேற்றான் றன்னைச்
சுடர்த்திங்கட் சடையானைத்
தொடர்ந்து நின்றென்
தாயானைத் தவமாய
தன்மை யானைத்
தலையாய தேவாதி
தேவர்க் கென்றும்
சேயானைத் தென்கூடல்
திரு வாலவாய்ச்
சிவனடியே சிந்திக்கப்
பெற்றேன் நானே.

திருச்சிற்றம்பலம்
-திருநாவுக்கரசு சுவாமிகள்.

இன்று மாவிட்டபுரத்தில்

## ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக பரமாச்சாரிய சுவாமிகளுக்கு வரவேற்பு

காஞ்சிபுரம் தொண்டை மண்டல மெய்கண்டாராதீன குரு மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக பரமாச்சாரிய சுவாமிகளுக்கு இன்று மாலை 5-30 மணியளவில் மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி கோவில் மண்டபத்தில் வரவேற்பு விழா நடைபெறும். இவ் விழாவை வேதாக சைவசித்தாந்த சபை, சைவ அனுட்டான பாதுகாப்புச் சபை, ஆலய தர்மகர்த்தாக்கள் சபை ஆகியனவற்றின் ஆதரவில் வேதாகம முறைப்படி நிகழும்.
(ந. தி)

## வித்துவானைப் பாராட்டுதல் தமிழன்னைக்குப் புரியும் சிறப்பு

——0——

"இன்று தமிழ் இலக்கணத்தின் அறிவுடைக்களஞ்சியமாகவிளங்குபவர் வித்துவான் ந சுப்பையாபிள்ளை அவர்கள். ஈழநாட்டில் தமிழ் வளரப் பல பண்டிதர்களை உருவாக்கிய பெருமை வித்துவான் அவர்களையேசாரும் இன்று வித்துவான் என்று அழைப்பதானால் அப்பெருமை திரு. ந. சுப்பையா பிள்ளையையே குறிப்பிடும.

வண். நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையில் தலைமை ஆசிரியராய் இருந்து இளைப்பாறிய பின்பும் தமிழ்ப்பணி புரிவதிலிருந்துவித்துவான் இளைப்பாறவில்லை.

இன்றும் பல பண்டிதர்களை உருவாக்கியவண்ணமே இருக்கின்றார். அன்னாரின் சேவைக்கு செய்யும் மதிப்பும் பாராட்

(வளர்ச்சி 3-ஆம் பக்கம்)

# மேன்மைகொள் சைவநீதியை வளர்க்குக

## பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள்

(முன் வளர்ச்சி — 5)

நாவலர் நம் நாட்டுக்குத் தேவையாயிருந்த சந்தர்ப்பத்தைச் சிந்தித்து நல்ல தவம் இருந்தற்கு நாவலர் திருப்பணிச் சபை எடுத்த முயற்சிகள் பயன் செய்ய வேண்டும்.

1874 ஆம் ஆண்டில் இந்த நல்லூர் என்கின்ற திவ்ய தலந்தில் நடந்ததொரு விசேஷத்தை கனகரத்தினம பிள்ளை எழுதியதும் நாவலர் சபை வெளியிட்டதுமான நாவலர் சரித்திரம் பின் வருமாறு வருணிக்கின்றது.

"கந்தசுவாமி கோயிற் திருவிழாச் சமீபித்தபடியால் தேவாரத் திருக்கூட்டச் சிறப்பையும், தேவாரம் முதலியவை திருவிழாக் காலத்திலே சுவாமிக்குப் பின்னால் ஓதுவதாற் சனங்களுக்குண்டாகும் கடவுட் பக்தியையும், இவ் யாழ்ப்பாணத்துச் சனங்களுக்குக் காட்ட நினைத்து திருவாவடுதுறையினின்று ஓதுவார் சிலரை அழைப்பித்து திருவிழாக் காலத்திலே அவர்களுக்கும் இங்குள்ள மறைச் சைவர்களுக்கும் தெற்கு வீதி மடத்திலே புண்ணியவான்கள் சிலரைக் கொண்டு மாகேசுர பூசை செய்வித்து, சுவாமி வீதியிலே உற்சவங் கொண்டருளும்போது சுவாமிக்குப் பின்னாக அவர்களைக் கொண்டு தேவாரம ஓதுவித்துக் கொண்டு வந்தார். இவர்கள் தமிழ் வேதமாகிய தேவாரத்தை ஓத அதனைக் கண்ட பிராமணர் தாங்களும் வந்து சுவாமிக்குப் பின்னாக வேதம் ஓதுவாராயினார்கள். அவரும்—நாவலரும் வீபூதி உத்தூளனஞ் செய்து திரிபுண்டரந் தரித்துத் தலையிலே சிரமாலையும், கழுத்திலே கண்டிகையுங் கையிலே பௌத்திரமுந் தரித்து யாவருக்கும் பக்தியை விளைக்கத்தக்க சிவவேடப் பொலிவோடு திருக்கூட்டத் தலைவராய் நின்றார். அத்திருக்கூட்டத்தின் சிறப்பை என்னென்று சொல்வோம்! எதற்கொப்பிடுவோம்!! ஆதியிலே சுப்பிரமணியப் பெருமானின் அவதாரமாய் விளங்கிய திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் பதினாறாயிரம (16000) திருக்கூட்டத்தோடு தோற்றிய சிறப்புக்கொப்பிடலாம்.

—(ஆறுமுகநாவலர் சரித்திரம் 110, 111ம் பக்கம் பார்க்க) இந் நிகழ்ச்சி இற்றைக்குத் தொண்ணூற்றைந்து வருடங்களுக்கு முந்தி நிகழ்ந்ததொரு நிகழ்ச்சி வருகிற 1974-ம் ஆண்டு அந் நிகழ்ச்சியின் நூறாம் ஆண்டு. நூறாம் ஆண்டு ஆவதற்கு முன்னமே நாவலர் பணிச் சபை நாவலரின் ஆத்ம சத்தியை பயன்செய்யுமுகமாக நல்ல காரியங்கள் பலவற்றை இந்த நல்லூரிற்செய்து மேன்மைகொள் சைவநீதியை விளக்கஞ் செய்யுமென்று நம்புவோமாக.

நற் சிந்தனையையும் நல்ல தவத்தையும் நாம் ஒவ்வொருவரும் மேற்கொள்வோமாக. நாவலர் பெருமான் திருவடிகளுக்கு வணக்கம். நாவலர் பணிச் சபையின் நன் முயற்சிகள் இனிது கைகூடுவனவாக.

[நல்லூர் நாவலர் சிலை மணிமண்டபத்தில் சென்ற 1 12-69ல் நடைபெற்ற நாவலர் குருபூசை விழாவில் தொடக்கவுரையின் இறுதிப் பகுதி]

மில்க் வைற் நீல சோப்
50 மேலுறைகளை அனுப்பி ஒரு




1970-ஆம் ஆ
கலண்டரைப்
பெற்றுக்கொள்ளுங்கள்.
மில்க்வைற்சோப்தொழிற்சாலை
யாழ்ப்பாணம்.

THE SAIVAPRAKSA PRESS

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்கதண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

சௌமிய ௵ தை ௴ ௩-௳ வெள்ளிக்கிழமை [1970

# நாவலர் சொத்துக்கள்

15-1-70ல் வண் - நாவலர் மகா வித்தியாலயப் பழைய மாணவர் சங்கம் தனது முதலாண்டு விழாவினைக் கொண்டாடியபொழுது, பண்டிதமணி வித்துவான் ந. சுப்பையாபிள்ளை அவர்களுக்கு ஒரு பாராட்டு வைபவத்தை நடத்தியது. பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் தமது பாராட்டுரையில் நாவலர் சொத்துக்கள் சம்பந்தமாகக் கூறியவை யாவராலும் சிந்திக்கத்தக்கவை.

"நாடு நெறிப்படுவதற்குப் பற்பல வேறு திட்டங்கள் வகுத்து அவை செயற்படுத்தற்குச் சொத்துக்களும் வைத்துச் சென்றிக்கின்றார் நாவலர்பெருமான்.

நமது தவக்குறைவு காரணமாக நாவலர் சொத்துக்கள் அவர் திட்டங்களுக்குப் பயன்பட வேண்டிய நேரத்தில் பயன்படாமல் அரசாங்கத்தின் வசப்பட்டு வாளாகிடக்கின்றன. உரிய காலத்தில் நாவலர் நோக்கத்தை எடுத்துக்காட்டாமையால் அரசாங்கம் எடுத்துக் கொண்டது. அரசாங்கத்தை குறை கூறுவதற்கு இடமில்லை

பெற்றோரும் அபிமானிகளும் அதிகாரம் படைத்தவர்கள் மூலம் நாவலர் சொத்துக்களை நாவலர் திட்டங்களுக்குப் பயன்படச்செய்ய வேண்டும். செய்ய முடியும். இது சித்திக்குமானால் நாவலர் திட்டம் நமது வித்துவான் அவர்களைப்போல இன்னும் எத்தனையோ வித்துவான்கள் தோன்றுவதற்கு உபகாரமாயிருக்கும். வரும் சந்ததிக்கு வாய்ப்பு ஏற்படும். அன்றியும் இக்காலக் கேடுகளைச் சீர்ப்படுத்துவதற்கும் நாவலர் திட்டத்தில் வழிகள் உண்டு"

நாவலர் கல்வித் திட்டத்தின்படி வண்ணார்பண்ணைச் சைவப்பிரகாச வித்தியாசாலையிலும், சிதம்பரம் சைவப்பிர்காச வித்தியாசாலையிலும் தமிழ், சமஸ்கிருதம், இலக்கணம் இலக்கியம், புராணேதிகாசங்கள் கற்பிக்கப்படுதல் வேணடும். விவேகமுள்ள பிள்ளைகளுக்கு உணவு, உடை இலவசமாக வழங்கப்படுதல் வேண்டும். வித்துவான் சுப்பையாபிள்ளை அவர்களும், பண்டிதமணி சி கணபதிப்பிள்ளை அவர்களும் பிறரும் நாவலர் கல்வித் திட்டத்தின்படி கற்றவர்கள். அரசாங்கம் பள்ளிக்கூடங்களைத் தேசியயமாக்கிய பின்பு நாவலர் சொத்துக்களை மீட்டெடுத்து அவருடைய நோக்கத்தை நிறைவேற்றக் கூடிய முயற்சிகளைச் சைவமக்கள் கையாண்டிருத்தல் வேண்டும்.

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை இம் முயற்சியில் ஈடுபட்டு அரசாங்கத்துடன் தொடர்பு கொண்டது. ஆறுமுகநாவலர் சபை ஆரம்பித்த பின் சபையும் முயற்சியைத் தொடரவில்லை. ஆறுமுகநாவலர் சபை அப்பணியை மேற்கொளளும் என்னும நோக்கத்துடன் அங்ஙனஞ் செய்ய நேர்ந்தது. நாவலர்பெருமானுடைய நோக்கத்தை நிறைவேற்றுவதே பெரிய தொண்டாகும். பண்டிதமணி அவர்களின் வேண்டுகோளை நடைமுறைக்குக் கொண்டுவருதல் பெரும் புண்ணியம். நாவலருடைய ஆன்மா பேருவகை கொள்ளும.

——::——

# சமய வளர்ச்சிச் சர்வகலாசாலை

அப்பர் சுவாமிகளின் சூலை நோயை அகற்றிய திருவதிகை க்ஷேத்திரத்தில் சமய வளர்ச்சிக்கான 'சர்வகலாசாலை' ஒன்றை ஏற்படுத்துவதென்று அண்மையில் நிகழ்ந்த தமிழ்நாடு தெய்விகப் பேரவைக்கூட்டத்தில்முடிவு செய்யப்பெற்றுள்ளது. திருவிடைமருதூரில் டி பேரவைத்தலைவர் தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணியதேசிக ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகள் தலைமையில் இக் கூட்டம் நடைபெற்றது. இச்சர்வகலாசாலை வருகிற கல்வி ஆண்டிலிருந்து செயல்படுமென அறியப்படுகிறது. தெய்விகப் பேரவைக்கு 1970—73 ஆம் ஆண்டுகளுக்கு தவத்திரு குன்றக்குடி அடிகளார் தலைவராகத் தேர்வுபெற்றுள்ளார்.

(எமது சிதம்பரம் நிருபர்)

**நாவலர் நல்வாக்கு**

உள்ளது போதும் என்று
அமைந்த மனமே குறைவு
அற்ற களஞ்சியம்.

# ஷண்மத தெய்வ வழிபாடு

(1- ஆம் பக்கத்தின் வளர்ச்சி)

டும்? அதை அறிவிக்கும் சொல் ஏதுவாயினும் அது அச்சமயாதீதப் பொருளை உணர்த்துவது என்பது அரிதே. அதனால் தாயுமானவர் "சைவம் முதலாம் அளவில் (லாச்) சமயமும் வகுத்து, சமயங் கடந்த மோன சமரசம் வகுத்த நீ, உன்னை யான் அணுகவும் தண்ணருள் வகுக்க இலையோ" என்று அப்பொருளை நோக்கி வினவியருளினார். சமயாதீதம் (சமயம் கடந்தது) மௌநம் சமரசம் என்னும் மூன்றினுள் உள்ள நன்மையைச் சிந்திக்க வேண்டும். இச்சமயாதீதப் பொருளைத் தான் அத்வைத சாஸ்திரங்கள் 'பரப்பிரம்ம வஸ்து' என்று குறிக்கின்றன. அவ்வட சொற்பெயர்ப் பொருளைத் தமிழில் வெவ்வேறு சொற்றொடர்களாகக் குறித்தார்கள் அப்பர் சுவாமிகள், "மிக்க பெரும் பொருளைப் பெரும்பற்றப் புலியூரானைப் பேசாத நாள் எல்லாம் பிறவா நாளே" என்று பாடியருளியதில் பரப்பிரும்ம வஸ்து என்றதை 'மிக்க பெரிய பொருள்' என்று குறித்த வாய்மை அறியத்தக்கது. பரம் - மிக்கது, அபரம் குறைந்தது. பிரமம் - பெரியது, வஸ்து - பொருள் தாயுமானவர் மற்றொரு பாடலில் ஜகத்தவரைச் சேர வருக என்று அழைச்சுமிடத்து 'சமயாதீத பழம்பொருள்' என்று குறித்ததை எல்லாரும அறிவர் அப்பொருளை அறிவிக்கும் பொருட்டுத் திருக்கோவில்கள் இன்றும் விளங்குகின்றன. அவ்விளக்கம் ஒன்றே ஷண்மத தெய்வங்களைக் குறித்த பேத புத்தியை நீக்கி அபேத ஞானத்தை வளர்க்க உதவும்.

சிவாலயத்தில் அச்சமயாதீதப் பழம்பொருளைச் சிவபெருமானது உச்சியில் பாவிக்க வைத்திருக்கிறது ஆகமம். சிவலிங்கத்தையும பெருமான் என்பர். அச் சிவலிங்கப் பெருமானது உச்சியில் அப் பழம்பொருளாகிய சிவபெரும பொருளைப் பாவித்து வணங்குவதே சத்திய ஞானயாகம் மற்றைய திருவுருவங்கள் சமயம் சமயாதீதம இரண்டுக்கும் உரியவை. ஞானிகள் அவற்றிலேயும் சமயாதீதப் பொருளையே வழிபடுவார்கள். ஏனையோர் அப்படி வழிபடும் ஞானானுபவம் அடையும் வரையில் சமயக் கடவுளாகவே வழிபடுவர்.

சிவாலயம் ஷண்மத தெய்வங்களுக்கும் பொதுவாகும்

கணபதி (காணபத்தியம்)

சிவாலயத்திலே முதல் வழிபாடு கணபதிக்கே உள்ளது. கணபதியைப் பல இடத்தில் வழிபடச் செய்திருக்கும் முன்னோர் கருணையை ஆராய்து பார்க்க வேண்டும்.

'மந்தை, வழி, கோயில், குளமும் தல்வு தும்பிமுகன்' என்று குமரேச சதகம் அறிவிக்கும் இடங்கள் மட்டுமா? கோவையிலும் வேறு சிற்சில ஊர்களிலும் வீடுகளிலும் பிள்ளையார்க்குத் தனியாகச் சிறு கோவில் நிறுவி வழிபடுதலை நேரிற் கண்டிருக்கிறேம்.

கணபதி கோவில் இல்லாத சிவாலயம் எங்கும் இல்லை. ஆகமத்தில் ஆன்மார்த்த பூசைக்கும் பரார்த்த பூசைக்கும் கணபதி பூசையைச் செய்ய விதித்திருக்கின்றது.

ஆறதார தியானத்தில் முதலா (மூலா) தாரத்திலே கணபதி தியானம் செய்யாதவர் யோக சித்தியைப் பெறர்.

தொடக்கத்திற் பிள்ளையார் சுழியின்றி எதையும் எழுதாத மக்கள் இன்றும் கோடிக் கணக்கில் வாழ்கின்றனர்

சைவர்களில், கணபதிக்குரிய திருப்பெயர்களைவைத்து அழைக்கப்படுவோர்க்கு அளவில்லை. கணபதியை வணங்காமல் அக்ஷராப்பியாசாரம்பம் எப்பொழுதும் இந்நாட்டில் இல்லை. புழுத்துக் கெடும் சாணமும் பிள்ளையார் பாவனையை அடைந்தபின் புழுத்துக் கெடுவதில்லை. இதை அறிந்து பிற சமயத்தாரும் கணபதியை வழிபடுகின்றனர்.

வட நாட்டில் இத் தெய்வ வழிபாட்டின் மிகுதியைக் குறித்து நம் நாட்டில் நன்கு விளக்கினார் ஒரு நாள் அவைத் தலைவர் நம நாட்டில் கணபதி கோயில் தனியாக இருப்பவைக்கு அளவில்லை ஒரே ஊரில் பலப்பல கோயில்கள் உள்ளன. அப்படி வேறு தெய்வங்கட்கு இல்லை.

குமாரஸ்வாமி (கௌமாரம்)

சிவாலயத்தில் முருகக்கடவுள் உள்ளே நுழை வாயிலின் இடப்பாலும் சிவ மூலஸ்தானத்துக்கு மேற்கும் வாயு மூலையும் இடமாகக் கோயில் கொண்டு வரங் கொடுத்தருள்கின்றார். குறிஞ்சி (மலைநில)க் கடவுள் எனப் போற்றப் பட்டாலும் ஏனைய நிலங்களிலும் அவர் கோயில் உண்டு தனிக் கோயில்கள் குமாரக் கடவுளுக்கு நாடு முழுவதும் பல உள்ளன கௌமாரமதம் எனத் தனியாகக் கழித்து விடவில்லை. சைவத்தின் முக்கிய தெய்வமாகப் போற்றப் பெறும் பெரும் சிறப்பு முருகனுக்கு உண்டு தென் நாட்டில் எல்லா மதத்தாரும் முருகனை வழிபடுகிறர்கள் இப்போது வழிபாட்டை நம் ஷண்மத மாநாடு மேலும் நிலைபெறச் செய்யும் என்பது உறுதி.

திருமால் (வைணவம்)

சிவாலயத்திலேயும் திருமால் வழிபாடு உண்டா எனக்கேட்பவர் நம் நாட்டில் எவரும் இரார் விஷ்ணுகோயிலிலும் சிவனைவழிபடுவதுண்டா என்று கேட்டால் வியப்பில்லை பரம சைவனும் தன் ஆன்மார்த்த பூசையில் விஷ்ணுவையும் வழிபடுகின்றன் ஆகம விதியும் அதை வற்புறுத்துகின்றது சிவபூஜா விதியில் விஷ்ணுவை வழிபடச் சொல்வதை எல்லோரும் அறிவர். அறிவதும் அன்றிச் சிவபூசை செய்வார் ஒழுங்குடன் செய்து வருவாராயின், விஷ்ணுவைப் பூஜித்த பின்பே சிவனைப் பூசிப்பர். பெரிய ஸ்தலங்களில் மிக்க பிரசித்தி வாய்ந்த திருக்கோயில்களில் விஷ்ணு மூர்த்தியைவழிபட்டு வரும் பழக்கம் இன்றும உண்டு. என்றும் இருக்கும்.

சூரியன் (சௌரம்)

பரார்த்த சிவாலயத்திலும். ஆன்மார்த்த சிவ பூஜையிலும் சூரிய பூஜை என்றும் உண்டு, எங்கும் உண்டு இது பல மதத்தார்க்கும் உரிய பொது வழிபாடு, 'பலர் புகழ் ஞாயிறு' என்ற நக்கீரர் வாக்கும் அதற்கு நச்சினார்க்கினியர் கூறிய விளக்கமும் நாட்டியும்.

தேவி (சக்தி வழிபாடு)-சாக்தம்

சிவாலயத்திலும், ஆன்மார்த்த பூசையிலும் அம்மன் வழிபாடு ஆகம விதிப்படி நடைபெறுகின்றது வழிபாட்டில் வேற்றுமை உண்டு, தேவியை வழிபடலாகாது என்று மறுப்பதில்லை. வழிபடும் மார்க்கத்தை மறுப்பது உண்டு வாம மார்க்கம் தக்ஷிண மார்க்கம் இரண்டில் முன் மார்க்கமே மறுக்கப்படுகின்றது. சைவாகம விதிப்படி நடக்கும் சக்தி வழிபாட்டை எல்லாரும் எப்போதும இசைந்து செய்து வருகின்றனர்.

இந்து மக்கள் எல்லோரும் வைதிக மார்க்கத்தில் ஈடுபட்டுத் தெய்வ வழிபாட்டை மறவாதவர்களாய்ச் செய்து ஆத்ம லாபம் பெறவேண்டும். இதனுப் பேதமின்றிச் சம சிந்தனையும் சாந்தியும் வளர்த்துக் கொள்ளும் வகையில் முற்குறித்த கணபதி, முருகன், திருமால், தேவி, சூரியன், சிவன் என்னும் ஆறையும் வழிபட்டு, மத பேதம் அறவொழுகி, நாட்டில் சமய ஒற்றுமையை வளர்த்து வருவது என்றும் நம் நாட்டை அதிக க்ஷேமமாக வைத்துக் காத்து வரும் சிறந்தவழியாகும், இஃது எல்லா நாடுகளும் நம் நாட்டை மிகப் போற்றி வரும் பெருமையை உண்டாக்கும்.

வளர்க ஷண்மத சமரச பாவம்!

நன்றி — கல்கி

# மலையகத்திற்கு முதலாவது பரிசு

வண்ணை. வைத்தீசுவரன் கோயில் பஜனைச் சபையினர் அண்மையில்நடாத்திய சமய அறிவு எழுத்துப்போட்டியில் முதற்பரிசு மலையகத்திலுள்ள மாணவருக்குக் கிடைத்தது. இப் போட்டியில் மலையகத்து மக்கள் பலர் பங்குகொண்டனர். பரீட்சையில் சித்தியெய்தியவர்களுக்கு டிசபையின் சார்பில், பொங்கற் றினத்தன்று ஆங்கு நிகழ்ந்த மார்கழி பஜனைப் பூர்த்தி விழாவில் வைத்திஸ்வரன் தேவஸ்தான காவலர்வர்கள் பரிசும் சான்றிதளும் வழங்கினார்கள்.

**கச்சியப்பசிவாச்சாரியர் சுவாமிகள் குருபூசை**

யாழ் சைவ சித்தாந்த சங்கத்தின் ஆதரவில் மாசி மாதம் 4ம் திகதி (15-2-70) ல் மேற்படி சுவாமிகள் குருபூசையைச் சிறப்புற நடாத்துவதற்காக ஒரு ஆலோசனைக் கூட்டம் சுழிபுரம் பறளையில் தைப்பூசத்தன்று பிற்பகல் 4 மணிக்கு நடைபெறவிருக்கின்றது

**கல்வி, கலாசார அமைச்சின் பரிசுத் திட்டம்**

கல்வி கலாச்சார அமைச்சு இலக்கியத்தையும் கலையையும் வளர்க்கும் நோக்கமாக ஆண்டுதோறும் ஒருலட்சம் ரூபா பெறுமதியான பரிசில்களை வழங்குவதற்கான திட்டத்தை தயாரித்துள்ளது. இதன் மூலம் எழுத்தாளர்கள், கவிஞர்கள், சிற்பிகள், இசைக் கலைஞர்கள், நாட்டியம் பயில்வோர் ஊககுவிக்கப்படுகின்றனர்.

**கலையரசு அவர்களின் அன்பளிப்பு**

இலங்கைக்கு விஜயம் செய்த இந்திய ஜனாதிபதி திரு. வி. வி. கிரி அவர்களுக்கு ஈழத்து நாடகத் தந்தை கலையரசு கே. சொர்ணலிங்கம் அவர்கள தான் எழுதிய "ஈழத்தில் நாடகமும் நானும்" என்ற புத்தகத்தின் இரு பிரதிகளை அன்பளிப்புச் செய்தார்.

# நாற்பாத நெறிவிளக்கம்

—0—

திரு. த. இராமநாதபிள்ளை B. A. (London)
ஓய்வுபெற்றஅதிபர் — பருத்தித்துறை

முன் வளர்ச்சி —3

சகமார்க்கம் புலனொடுக்கித் தடுத்தவளி யிரண்டும்
சலிப்பற்றுமுச் சதா மூலதா ரங்கள்
அக மார்க்கம அளிந்த வற்றின் அரும் பொருள்கள் உணர்ந்தங்
கணைந்து போய் மேலேறி யலர்மதி மண்டலத்தின்
மூகமார்க்கவட்டாங்க யோக முற்றும்
உழத்தலுழந் தவர் சிவன்ற னுருவதனைப் பெறுவர்.

ஒருவன் தன் கருமங்களை முடித்துத் தரும்படி தன் தோழனைக் கேட்டல் போல் யோகசித்தர் தம் கருமங்களை முடித்துத் தரும்படி முதல்வனைக் கேட்பர் போலும்.

அருணந்தியார் சகல ஆகமங்களையும் கற்றுப் பொய் கண்டகன்ற மெய்கண்டதேவர் அருளிய சிவஞான போதக் கருத்துக்களைச் சித்தியாரில் விளக்கி யுள்ளார் ஆகலின் நாற்பாத நெறியைப் பற்றி மெய்கண்டதேவர் என்ன சொல்கிறார் என்பதைத் தேர்வாம்.

ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந் தெனத்
தம்முதல குருவுமாய் தவத்தினில் உணர்த்த விட்
டன்னியம் இன்மையின் அரன் கழல் செலுமே
(எட்டாம் சூத்திரம்.)

இது ஞானத்தை உணரு முறைமையினை உணர்த்துதல் நுதலிற்று ஐம்புலன்களின் வழிச் சென்று மயங்கி ஆன்மா முதல்வன் உள் நின்று உணர்த்த, தவத்தின் பயனாகவே சிவனோடு சுத்தாத்துவிதநிலை அடையும் என்பதே சூத்திரத்தின்பொழிப்பு. இவ்விடத்துத் தவம் என்பது தன் கருத்தைத் தேர்தல் அவசியமாகும். தவம் என்பது துறவறமார்க்கத்திலிருந்து அட்டாங்க யோகம் செய்வதன்று மனம் பொறி வழி போகாமல் நிற்றற் பொருட்டு விரதங்களான் உண்டி சுருங்கலும் கோடைக் கண் வெயில் நிலை நிற்றலும் முதலிய செயலகளை மேற் கொண்டு அவற்றால் தம முயிர்க்குவரும் துன்பங்களைப் பொறுத்துப் பிறவுயிர்களை ஓம்புவதே தவம் என்பர் பரிமேலழகர்.

"உற்ற நோய் நோன்றல் உயிர்க் குறுகண் செய்யாமை
யற்றே தவத்திற் குரு". —திருக்குறள்

பிறவுயிர்களை ஓம்புதலே தவத்தின் நோக்கம் என்பது இனிது புலப்படும்.

இனி இத்தவத்தின் பயனாகவே ஞானம் உதிக்கும் என்றார் மெய்கண்டார். "ஈண்டு இவ்வான்மாக்களுக்கு முற்செய் தவத்தால் ஞானம் நிகழுமென்பது" முற் செய் தவம் என்பதற்கு ஐம்பொறியடக்கல் பிறவுயிரோம்பல் எனப் பொருள் கோடலே பொருந்தும். தவம் என்பது துறவறத்திலிருந்து உடம்பை வருத்துதல் அல்ல அருணந்தியாரும் அவரைப் பின்பற்றிச் சிவஞானமுனிவரும் தவமே தால் என்பதற்குச் சரியை கிரியை யோகம் என்பவற்றால்எனக் கருத்துக் கொண்டனர்; யோகம் என்பது அட்டாங்க யோகம் அன்றித் தியானத்தைச் சுட்டுமாயின் இவர் கருத்துப் பொருந்தும். சரியை கிரியை யோகம் ஞானம் என்னும் நிலைகளிலிருந்து விரதங்களைக் கைக் கொண்டு ஒழுகி உயிர்க்கு உறுகண் செய்யலாம் பொறிகளை வசப்படுத்தி ஒழுகுதலே தவமாகும் இத்தகைய தவமே ஞானம் தோன்றுதற்கு ஏதுவாகும் சுவாசப் பயிற்சியால் ஞானம் உதிக்கும் எனத் துணியவியலாது. அட்டாங்க யோக முறையிலும் இயமமும் நியமமும் தியானமும் ஏனைய ஆசனம் பிராணாயாமம் பிரத்தியாகாரம் தாரணைகளிலும் சிறந்தவை.

(வளரும்)

# உருத்திர மந்திரப் பெருமை

— பருத்தித்துறை. சிவஸ்ரீ. அ. கதிரேசக்குருக்கள் —

உருத்திரன் என்னும் பதம் துன்பத்தை நீக்குபவன் எனப்பொருள் படும். வேதத்தில் இது உருத்திர சூக்த மென வழங்கப்படும்.

உருத்திரன் பயங்கரமான வடிவமுடையவர் மூன்று கண்களையுடையவர் கரிய நிறமுடையவர் திரிசூலத்தைத் தாங்கியவர், சந்திரனைத் தரித்தவர். யமனை ஜயித்தவர் கரிய கண்டத்தையுடையவர் தேவர்களுக் தலைவர் அக்கினியும் அப்புவும ஔஷதிகளும் பூமியும் எல்லாப் புவனங்களுமானவர் எந்த உருத்திரனே அவனை உருத்திரனென்று வணக்கஞ் செய்வோம். நல்ல மனததோடு உருத்திரனை எந்தத் தேவாசுரர்கள் வணங்குகிறார்களோ அவனே சிவனாகும். உருத்திரனே! யமனினின்றும் என்னை இறப்பில்லாமல பாதுகாக்க வேணும் என உருத்திர சூக்தம கூறுகின்றது. சிவபெருமானுக்குச் செய்யப்படும் அபிஷேகங்களில் உருத்திராபிஷேகமு மொன்றாக விளங்கும. அது உருத்திர சங்கியையான பதினொரு பிராமணர்கள் உருத்திர சூக்த பாராயணஞ் செய்யப்படுவதோடு கந்த தைலாபிஷேகாதி ஸ்நபனபிஷேகம் செய்யப்படுவது, இதனால் எஜமானனுக்கு ஆயுளாரோக்கிய விருத்தியுண்டாகும்.

சோழநாட்டில திருத்தலையூர் என்னும் தலத்தில் திருவவதாரஞ் செய்த பிராமண குலோத்தமராகிய உருத்திர பசுபதிநாயனார் பரமசிவனிடத்தில் மிகுந்த பத்தியுடையவராயிருந்தார் அவர் இவ் உருத்திர சூக்தத்தை பகலும் இரவும தியானிக்கும் திருத்தொண்டினராய் தடாகத்தில் கழுத்தளவு நீரில் நின்று இரு கைகளையுஞ் சிரமேற் குவித்து சிவபெருமான் மகிழுந் தன்மையாக உருத்திர சூக்தமென்னும் இம் மந்திரத்தைச் செபித்தார். இவ் வுருத்திர மந்திரம் வேதத்தில் மிகவிசேடமாதல்பற்றிபெரிய புராணம் கூறுகின்றது. இந் நாயனார் புராணத்தில் அருமறைப் பயனாகிய உருத்திர மென்றும. நீரில் நின்று செய்யுஞ் செபதபங்கள்வேண்டிய பலனை விரைவிற் கொடுக்குமென்பர்.

"தெள்ளுநதண்புனல் கழுத் தளவாயிடைச் செறிய உள்ளுறப்புக்கு நின்று எனவும்" விசேஷித்துக் கூறப்பட்டது. அந்தணர்க்கு வேதமோதல் அறுவகைத் தொழில்களுள் முதற்கணுள்ளதால் உருத்திரபசுபதி நாயனார் இவ்வுருத்திர மந்திர செபத்தால் சிவலோகத்தையடைந்தார்

தினமும் சிவபெருமானுக்குச் செய்யப்படும் அபிஷேகத்தில் உருத்திர சூக்த மந்திரத்தால் அபிஷேகித்தல் விசேஷமாகும். வேதங்களில் ஆதியிலும் அந்தத்திலும் அரி ஓம் என்னும் பிரணவத்தைஉச்சரித்தல் முறையாகும். வேதங்களையும் ஆகமமந்திரங்களையும் ஒலிபெருக்கி மூலம் பல இடங்களுக்கும் பிரகடனப்படுத்தல் மிகையாகும் அவைகள் அந்தரங்கத்தில் போற்றப் படுவன.

"மானுடப் பிறவிதானும்,
வகுத்தது, மனவாக்காய
ஆனிஇடத்து ஐந்தும் ஆமே
அரன் பணிக்காக வன்றோ
வான் இடத்தவரும் மண்மேல்
வந்துஅரன்றனை அர்ச்சிப்பர்
ஊன் எடுத்து உழலும் ஊமர்
ஒன்றையும உணரார்
அந்தோ!"

# "எண்ணெச்செலவு பிள்ளை வளர்த்தி ?"



**பக்தர்:** "தெய்வத்திருமுறைகளைப் போற்றதவரை— நமக்கு வாழ்வில்லை'—திருக்கோவில் விழாக்களில் சிலஇடங்களில் ஒலிபெருக்கிகளில் பரப்பப்படும் பாடல்களைக் கேட்டால்— வேதனையாக இருக்கிறது" நாவலர்பிறந்த நாட்டில், அவரைப் போற்றுகிறோம் என்று கூறிக் கொண்டுநாம்செய்வதுஎன்ன? அப்பிடினுடியாழ் இந்துக்கல் லூரிஆசிரியர் வித்துவான் க. சிவராமலிங்கம் ரொம்ப அருமையாக வினாஒன்றையெழுப்பினார்? கோயில்களிலே பசனை பண்ணுகிறோம்; பணி செய்கிறோம்— திருக் கோவில்களைப் பரிபாலிக்கின்றோம் — என்று இன்று கூறிக் கொள்ளும் அத்தனைபேருக்கும் ஒரு நல்ல (injection) ஊசி போட்டுஅனுப்பிவிட்டார்; இது வண்ணை, வைத்தீஸ்வரன் கோயில் பசனைச் சபையார் மார்கழி மாதம் முழுக்க அதிகாலையில் வீதிகளெங்கும் பசனை செய்ததமையைப்பாராட்ட, பொங்கலன்று ஏற்பாடுசெய்த பரிசளிப்புவிழாவில் மிகச்சிறப்பாகநிகழ்ந்தது.

**சித்தர்:** உண்மையாகப் பாராட்டப்படக்கூடிய செய்தி. 'நீதிமன்றத்தில்நீதிஅரசர்முன்பு எவ்வளவு அமைதியாயும் பணிவாயும் மக்கள் நிற்கிறார்கள்; அதனிலும் பார்க்க எத்தனைமடங்கு புனிதமாக, அமைதியாக, பயபக்தி, மன ஒடுக்கம் தியானத்துடன் ஆலயத்தில் மக்கள்நிற்க வேண்டும்...? அப்படித்தானா இன்று எங்கும் எல்லாச் சைவ மக்களும் நடந்து கொள்கின்றார்கள்? இவ்வாறன ஒருவினவை பண்டிதமணிஐயா அவர்கள் நம்மிடம் ஒருமுறை வினவினார்கள்; 'சைவ ஆசார சீலத்தை வளர்க்கிறதற்கு சபைகள்— மன்றங்களுக்குக் குறைச்சலில்லை! பயனைத்தான் காணோம்! 'எண்ணெய்ச் செல வொழியப் பிள்ளை வளர்ச்சி யில்லைப் பாருங்கோ? அதுதான் இப்பகவலை?

"நாயன்மார்-நாதன்"


## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழக்கு இல: M B 6812
அல்லைப்பிட்டி, அலேசு தாவீது
—வழக்காளி
அல்லைப்பிட்டி, சரவணமுத்து
செல்லத்துரை எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திரிக் கோட்டின் M. B. 6812-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1970-ம் ஆண்டு மாசிமீ 25-ஆம் (25-2-70) புதன்கிழமை காலை 10-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் வைத்து பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: ரூபா 2652/-ம், 10-7-64 தொடக்கம் 14-2-66 வரைக்கும் ரூபா 1500/-க்கு 12% வட்டியும் அதன்பின் முழுத் தீர்வைத் தொகைக்கும் பணம் முற்றாக இறுபடும் வரைக்கும் 5% வட்டியும் இவற்றில் ரூபா 2250/- கட்டப்பட்டுள்ளது

ஆதன விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணம் டிஸ்திறிக், தீவுப்பகுதி அல்லைப்பிட்டி கோவிற்பற்று. அல்லைப்பிட்டி இறை "சுப்பர்வளவு" நிலப்பரப்பு 25 ஆண்டு உத்தரவுபெற்ற நொத்தார P. இராமநாதனால் 9-7-1944ல் தயாரிக்கப்பட்ட 648-ம் இலக்கப் பட்டத்தின்படி நி பர. 16 குளி 10¾ வீடும், இளம் முது பனைகளும், கிணறும, எல்லை கிழக்கு கந்தவனம் சங்கரப்பிள்ளைக்கும் மற்றையோருக்குமுரிய ஆதனம், வடக்கு முருகப்பர் கந்தவனத்துக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். மேற்கு வள்ளியம்மையின் உரிமையாளருக்கும் வைத்திலிங்கம் செல்லத்துரையினதும் ஆதனங்கள். தெற்கு சரவணமுத்து பொன்னு சின்னத்தங்காவின் ஆதனம். இதடங்கலும். C, 315/51ல் பதியப்பட்டது.

சே. பாண்டித்துரை
கொமிஷனர், விலைமதிப்பாளர்
உத்தரவுபெற்ற ஏலதாரர்
மல்லாகம். 12-1-70
M. 378 16-1-70


# வித்துவானைப் பாராட்டுதல் தமிழ்...

( 1-ம் பக்கத்து வளர்ச்சி )

டும் தமிழ்த் தாய்க்குச் செய்யும் மதிப்புக்கு ஒப்பாகும் எனவே அன்னாருக்கு இவ்வளவு சிறந்த ஒரு வரவேற்பை அளித்துக் கௌரவிப்பது மிகமிக பொருத்தமாகும" என்றிவ்வாறு நேற்று (15-1-70 -இல்) நடைபெற்ற பாராட்டு விழாக் கூட்டத்தில் தெரிவிக்கப்பெற்றது ஷவித்தியாசாலைப் பழையமாணவர்சங்க முதலாவதாண்டு விழாவும், ஸ்ரீ லங்கா சகித்தியமண்டலத்தின் 'உயர்உறுப்பினர்'என்னும விருதினைப் பெற்றுக் கௌரவிக்கப் பெற்ற பண்டிதமணி விதவான ந. சுப்பையாபிள்ளை அவர்களைப் பாராட்டும் விழாவும் நாவலர் வித்தியாசாலையில் வெகு சிறப்பாக நடைபெற்றது.

வியாகரண வித்துவான் பிரமஸ்ரீ. சீதாராம சாஸ்திரி வித்துவான் க கி. நடராஜன் B. O. L, திரு. மு. மயில்வாணம, வித்துவான இ. திருநாவுக்கரசு முதலியவர்கள் பாராட்டுரை நிகழ்த்தினார்கள். ஷ மகாவித்தியாலய தலைமையாசிரியர் கூட்டத்திற்குத் தலைமை வகித்தனர். பண்டிதமணி அவர்கள் அனுப்பிய பாராட்டுரை, சைவப்புலவா வ. க. கந்தசாமி அவர்களால படிக்கப்பட்டது.

# "கோயில் நான்மணிமாலை" வெளியீடு

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுரம் ஆதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் ஆதீனத்தின் 2 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ ஆனந்த பரவசதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின் குருபூஜை விழாவை மார்கழி 11-ம் நாள் அன்று சிறப்புற நடத்தி வைத்தார்கள். மகாசந்நிதானம் அவர்கள் குருபூஜை விழாவின் நினைவாக "கோயில் நான்மணி மாலை"யை விளக்கங்களுடன் அச்சிட்டு வெளியீடு செய்து எல்லோருக்கும் அன்பளிப்பு செய்தார்கள்.

(எமது சிதம்பரம் நிருபர்,)

திரு. மா பாலசுப்பிரமணியன்


யாழ்ப்பாணம்

## ஐக்கிய இலாப நிதி

கொம்பனி லிட், (ஸ்தாபிதம் 1918)

10,000-00 பங்குகள் ரூபா 5 விகிதமான 50,000-00

மாதாந்த சேமம் கட்டும் முறை.

மாசமொன்றுக்கு ரூபா 10-00 விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் கட்டுப் பணமும் வட்டியுமாக ரூபா 1000-00 திருப்பிக கொடுக்கப்படும். ரூபா 100-00 விகிதமாகக் கட்டினால் ரூபா 10,000-00 கொடுக்கப்படும்.

சேமிப்பு பற்றுவரவு எச்சநிதி.

ரூபா 1500-00 க்கு குறையாமல் இருக்குமாயின் 1 வீத வட்டியுடன் சேமிப்புப் பற்று வரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட சேமம்.

சேமப்பணம் முறையே, 12, 24, 36, என்னும் மாச காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டி முறையே 7, 8, 9, விதமாகக் கொடுக்கப்படும்,

கடன்.

நகைகள் ஈடு வைத்துக் கொண்டும், சேமப்பணத்தைப் பிணையாக வைத்துக் கொண்டும் கடன் கொடுக்கப்படும் முதலையும் பாகம பாகமாகக் கொடுக்கலாம்,

இன்னும் வேண்டிய விபரங்களை எங்கள் காரியாலய மூலமாக அறிந்துகொள்ளலாம். — மனேஜர்

### கோட்டு விற்பனவு விளம்பரம்

வழக்கு இல: M. B. 8574
நல்லூர் யாழ்ப்பாணம்
1. சோமசுந்தரக்குருக்கள் நடராசக் குருக்களும்
2. பெண் வாலாம்பிகையும்
— வழக்காளிகள்

எதிராக

39, பழைய பூங்கா வீதி யாழ்ப்பாணம்,
1. சாமுவேல் பெஞ்சமின் வைமண்ரோட்டு யாழ்ப்பாணம்
2. செல்லையா கைம்பெண் இராசம்மா
— எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 8574-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1970-ஆம் ஆண்டு மாசி மீ 16-ஆம் திகதி (16–2–70) திங்கட்கிழமை முற்பகல் 10–30 மணி தொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:— ரூபா 3283-ம் 1–11–1966 தொடக்கம் 25–2–1967 வரைக்கும் ரூபா 2000-க்கு 14 வீத வட்டியும் அதன்பின் முழுத் தீர்வைத் தொகைக்கும் பணம் முற்றாக இறுக்கும்வரைக்கும் 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 366–40 சதமும். செலவில் ரூபா 125/— கட்டப்பட்டுள்ளது.

**ஆதன விபரம்**

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி கன்னாதிட்டி கோவிற்பற்று கன்னாதிட்டி இறை, 'முதலிக்குளம்' நிலப்பரப்பு 4 குளி 12, 1/2 ஆகும் உத்தரவுபெற்ற உலாந்தா T. கந்தையாவின் 29-3-1962 திகதி கொண்ட 1106-ம் இலக்க படத்தின்படி நிலப்பரப்பு 4 குளி 11 இதில் குறிப்பிட்ட 1106-ம் இலக்கப் படத்தில் காட்டப்பட்ட 2 ஆவது துண்டான தெற்குப் பக்கத்திலுள்ள பிரிக்கப்பட்ட நிலப்பரப்பு 2 குளி 5, 1/2 வீடுகளும் மற்றும் உடமைகளும், குறிப்பிட்ட 1106 இலக்கப் படத்தில் காட்டப்பட்ட வடக்குப் பக்கத்திலுள்ள 1-வது துண்டுக் காணியிலிருக்கும் கிணற்றில் பங்கும் வழமையான வழிவாய்க்காலுரிமையும். எல்லை கிழக்கு பசுபதி இராசையாவின் ஆதனம் வடக்கு குறிப்பிட்ட படத்திலுள்ள 1வது துண்டான சாமுவேல் ஜெருசப்பர் அல்லது ஐயாத்துரைக்குரிய ஆதனம். மேற்கு ரோட்டும் நல்லையா பெண் அருளம்மாவின் ஆதனமும். தெற்கு நல்லையா பெண் அருளம்மாவின் ஆதனம்.

இந்த நிலப்பரப்பு 4 குளி 12½ யாழ்ப்பாணம் D 233/229 -ல் மதிப்பிட்டது:

செ. பாண்டித்துரை
கொம்மிஷனர், விலை மதிப்பாளர்
உத்தரவுபெற்ற ஏலதாரர்
மல்லாகம், 12-1-70
எம் 377 16—1—70

### கோட்டு விற்பனவு விளம்பரம்

வழ. இல: M. B. 7527
பொன்னுத்துரைசண்முகலிங்கம் கொக்குவில் மேற்கு கொக்குவில்
—வழக்காளி

எதிராக

(1) மகமட் கசிம் அப்துள் கற்றில் மனைவி
(2) ஐசா உம்மா இருவரும் வண்ணார்பண்ணை மேற்கு
—எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 7527-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1970-ம் ஆண்டு மாசி மீ 19 (19–2–70) வியாழக்கிழமை முற்பகல் 10–00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத்தொகை முதல்வட்டி ரூபா 6980–60 சதம். 2–7–65 தொடக்கம் 30–3–68 வரைக்கும் 4180 ரூபாவுக்கு 8 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகையும் இறுக்கும்வரையும் 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 366–95 சதம்.

**ஆதன விபரம்**

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வண்ணார் பண்ணை கோயிற்பற்று வண்ணார்பண்ணை தென்மேற்கு காறையன் காடு என்று அழைக்கப்படும் காணி நிலப்பரப்பு 1-ம 14, 3/8 குளியும் கிணறும் வீடும் செய்பயிரும். எல்லை கிழக்கு ரோட்டும், வடக்கு சுளுத்தான் கண்டு காதர் மருமகன். மேற்கு சுளுத்தான் மருமகன் கைம்பெண் ரகுமாத்துமாவும் மறுபேரும் தெற்கு அந்துலேட்பை ரலினு முகமட்.

இ. கனகரெத்தினம்,
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்
நம். 35/2 கொழும்புத் துறை வீதி,
சுண்டிகுளி, யாழ்ப்பாணம்,
எம். 374 16–1–70

## அடைவு நகை ஏலவிற்பனவு விளம்பரம்

அரசாங்க உத்தரவுடன் வலந்தலை வடக்கு. காரைநகரில் அடைவு பிடிக்கும் வே. சுப்பிரமணியம் அவர்களின் அடைவு கடையில் 1966-ம் ஆண்டு ஆனி மாதம் 22-ம் திகதி தொடக்கம் 1968-ம் ஆண்டு பங்குனி மாதம் 31-ம் திகதி வரை அடைவு வைக்கப்பட்டு மீட்கப்படாதிருக்கும் நகைகள் யாவும் என்னால் 1970-ம் ஆண்டு மாசி மாதம் 14-ம் திகதி சனிக்கிழமை முற்பகல் பத்து மணி தொடக்கம் ஷை அடைவு கடையில் இருந்து பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

வை ஏரம்பமூர்த்தி
Auctioneer
ஏலவிற்பனையாளர்
காரைநகர்.
9-1-70 எம். 376 16, 23-1-70

## கோட்டு விற்பனவு விளம்பரம்

திருநெல்வேலி தெற்கு, யாழ்ப்பாணம்
சின்னத்தம்பி சிவசிதம்பரம் —வழக்காளி
இல M B 9798 எதிராக
தாவடி வடக்கு. தம்பு விஜயரட்ணம் தனக்காகவும், காலஞ்சென்ற அவரது மனைவி மகேஸ்வரியின் சட்டபூர்வமான தத்துவகாரனாகவும் —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 9798-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் துண்டுக் காணியை 1970- ஆம் ஆண்டு மாசி மீ 27-ம் திகதி (27-2-70) வெள்ளிக்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபா 1882-50 சதம் இதில் ரூபா 1500/-க்கு 7-3-68ம் திகதி தொடக்கம் 29-3-69ம் திகதி வரைக்கும் 12 வீத வட்டியும் பின் முழுத் தொகைக்கும் 29-3-69 திகதி தொடக்கம் இறுபடும் வரைக்கும் 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 533-29 சதம். இதில் ரூபா 400/- கொடுபட்டது

**ஆதன விபரம்**

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பகுதி உடுவில் கோவிற்பற்று தாவடி இறை ''ஆழ்வான் ஒல்லையும இருப்பையடியும்'' நிலப்பரப்பு 5, வீடும, செய்பயிர்களும், தென்கிழக்கு மூலையில் இருக்கும் கிணற்றில் பங்கும், தூர்வை வழிவாய்க்காலும். எல்லை கிழக்கு: செல்லத்துட்டி கந்தையாவுக்கு உரிய ஆதனம், வடக்கு: அம்பலவாணர் பெண் தங்கமுத்துவுக்கும், பொன்னையா பெண் சின்னத்தங்கத்தின் உரித்தாளிகளுக்குரிய ஆதனம, மேற்கு காகமுத்து பொன்னையாவுக்குரிய ஆதனம, தெற்கு ஒழுங்கையும் கார்த்திகேசு கைம்பெண் அன்னமுத்துவின் பங்காளருக்குரிய ஆதனம். இத்தடங்களும் விற்கப்படும்.

ந. ஆறுமுகம்,
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்
சித்தங்கேணி,
4-1-70. எம் 371, 16-1-70

## கோட்டு விற்பனவு விளம்பரம்

தியாகராசா இரத்தினகோபால் கைம்பெண் பாக்கியம் அரியாலை யாழ்ப்பாணம். —வழக்காளி
இல. M. B. 9025 எதிராக
1 சின்னட்டி சின்னத்துரையும் மனைவி
2. சரஸ்வதியும் கச்சேரி கிழக்கு. அரியாலை.
—எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 9025-ம இலக்க வழக்கில எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1970-ஆம ஆண்டு மாசி மாதம் 11-ந்திகதி (11–2–70) புதன்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத்தொகை - முதல் வட்டி ரூபா 1000–00ம், 22-4-67 தொடக்கம் 12-9-67 வரைக்கும் ரூபா 500–00க்கும் 12 வீத வட்டியும் அதன்பின முழுத்தொகைக்கும் இறுக்கும வரை 5வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 316-00

**ஆதன விபரம**

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி சிவியாதெரு கோவிற்பற்று சிவியாதெரு இறை 'புக்கடியிற்புலம்'' நிலப்பரப்பு மூன்றும் (3) கிணறும, தென்னை மரங்களும, செய்பயிர் வான்பயிர்களும் அதற்கு எல்லை கிழக்கு மாணிக்கம பெண் பாலுப்பிள்ளைக்கு உரிய ஆதனம், வடக்கு புகையிரத ரோட்டு. சின்னட்டி சின்னத்துரைக்கும் பங்காளருக்கும உரிய ஆதனம. தெற்கு கதிரவேலு கந்தையாவுக்கு உரிய ஆதனம, மேற்கே இருக்கும் ஆதனத்துக்கு இக்காணிக்குள் இருக்கும் கிணற்றில் பங்கும். வடக்கு எல்லை ஓரமாகப்போகும வழிவாய்க்கால் பாவிப்பு உரித்தும உற்பட பதிவு இலக்கம்; 200/130

கா. தர்மலிங்கம்
கொம்மிஷனரும் விலமதிப்பாளரும்,
உரும்பராய், 10-12-69,
எம். 375 16–1–70

ஆறிருதடந்தோள்வாழ்க வறுமுகம்வாழ்க வெற்பைக்
கூறுசெய்தனிவேல்வாழ்க குக்குடம்வாழ்க செவ்வேள்
ஏறியமஞ்ஞைவாழ்க யானைதன்னணங்கு வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க வாழ்கசீரடிய ரெல்லாம்.

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன் துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள சைவப்பிரகாச யந்திரசாலையில், 2 ம் நம் இரண்டாமொழுங்கை பிறவுன் வீதியில் வசிக்கும் திரு. மூ. மயில்வாகனம் அவர்களால் 16—1—1970 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பத்திராதிபர் திரு. மூ. மயில்வாகனம் அவர்கள்

## வரமொன்று தரவேண்டும்!

இராகம் - ஸ்ரீரஞ்சனி :: தாளம் - ஆதி

பல்லவி

வரமொன்று தரவேண்டும் நீ — அருள்
மலரொன்று தரவேண்டும் நீ — முருகா (வர)

அநுபல்லவி

பரவிடு மாறு பதிவளர் அரசே
பண்ணுதிர் ஞானப் பழமுதிர் அமுதே (வர)

சரணம்

உன்னைநி னைக்கநல்ல மனம் வேண்டும் - நினைந்(து)
ஓம் முருகா சொல்லும் வாய் வேண்டும் - அறிந்(து)
உன்னழ கைக்காணக் கண் வேண்டும் - நான்
உன்பணி யே செய்ய சுகம் வேண்டும் - கந்தா (வர)

—அளவையூர். அருட்கவி சி. விநாசித்தம்பிப் புலவர்

## திருவாசகத்திற்கு உருகாதார் யார்?

[யாழ். நாயன்மார்கட்டு ஸ்ரீ இராஜ இராஜேஸ்வரி யம்பாள் ஆலயத்தில் ஷை யூர் சைவசமய அபிவிருத்திக் கழகத்தினர் திருவாசக விழாவை பக்தி பரவசமாகக் கொண்டாடினர் விழாவில் சிறுவர் சிறுமியர்களின் பேச்சுக்களும் இடம்பெற்றன கேட்டோர் உள்ளம் உருகும்படியாக 6 வயதுக் குழந்தை செல்வி. யோக குமாரி நடராசா அவர்கள் 5 நிமிடங்கள்வரை சிற்றுரை நிகழ்த்தியபோது ஷை கழகத்தலைவர்உட்பட எல்லோருமே மெய்ம்மறந்து விட்டார்கள். செல்வியின் குரலை இதோ கேளுங்கள்:—

அன்புள்ள சபைத் தலைவரவர்களே! அறிவுள்ள பெரியோர்களே! தாய்மார்களே! செல்வச் சிறுவர் சிறுமியர்களே! வணக்கம்.

சிவபெருமான் எல்லாம வல்லவர்; எங்கும் நிறைந்தவர். சிவபெருமானின் அருளைப் பெற்றவர் மணிவாசகப்பெருமான. அவர் தேன் ஊறும திருவாசகத்தை நமக்குத் தந்தவர் திருவாசகத்திற்கு உருகாதார், ஒரு வாசகத்திற்கும உருகார்.

திருவாசகம் படித்தால் பத்தி பெருகும், புத்தி வரும், ஞானம ஏற்படும், இடர் தீரும், கவலை பறக்கும், இறைவன் திருவருள் கிட்டும்.

இவ்வுலகிலே பேரின்பம் தரவல்லது திருவாசகம்; முத்தி அளிக்க வல்லது திருவாசகம்; கல்லைப் போன்ற எம மனதை உருக்கிக் கரும்பு போலப் பேரின்பத்தைத தருவது திருவாசகம.

அதனாலேயே மார்கழி மாதத்தில் வருகின்ற திருவாதிரைத திருநாளில் ''கூவின பூங்குயில்! கூவின கோழி! குருகுகளியம்பின இயம்பின சங்கம்'' எனத் திருப்பள்ளியெழுச்சி பாடுகின்றோம்.

''காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடி
சோதிதிறம பாடிச் சூழ்கொன்றைத்தார் பாடி
ஆதி திறம்பாடி அந்தமா மாபாடிச்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோர் எம்பாவாய்''

எனப் பாடி மார்கழி நீராடுகின்றோம். அதனால் எல்லாம் வல்ல இறைவனின் திருவருளை நாம் பெறுகின்றோம். இதற்கு வழி வகுத்த மாணிக்கவாசக சுவாமிகள் திருவடிகள் வாழ்க. வணக்கம்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

இல: 60, கிடைன் பிளேஸ், பம்பலப்பிட்டி, கொழும்பு
டக்றர் வீரவாகு கதிரவேற்பிள்ளை பரமநாயகம்
இல M. B. 10098 எதிராக —வழக்காளி
1. வட்டுக்கோட்டை கிழக்கு, ஆப்பாத்துரை பொன்னுத்துரை
2. ஷை யூர் பெண் தனபாக்கியம் —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 10098-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1970 ம் ஆண்டு மாசி மாதம் 15 ஆம் திகதி (15–2–1970) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்,

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபாய் 5700-00-ம் 21–6–68 தொடக்கம் 9–8–69 வரைக்கும் ரூபாய் 5000–00க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 498–75 சதம்

**ஆதன விபரம்**

வடமாகாணம் யாழ்ப்பாணம டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப் பகுதி வட்டுக்கோட்டைக் கோவிற்பற்று வட்டுக்கோட்டை கிழக்கிறை ''பெரியபுலம்'' பர. நி. இலா. ஐந்து (பர. நி. இலா5) ம் வீடும். கிணறும் செய்பயிர் வான்பயிர்களும் வடக்கெல்லைக் காணியின் வடக்கெல்லையிலிருக்கும் கிணற்றில் பாகமும் அதன் வழிவாய்க்காலுரித்தும சொல்லப்பட்ட பர நி. இலா. 5க்கும் எல்லை கிழக்கு: ஆனந்தம் பெண் கனகம்மாவின் உரிமைக்காரர்கட்கும் விசுவலிங்கம் கைம்பெண் தங்கம்மாவிற்குரிய ஆதனங்கள், வடக்கு ஆனந்தம் பெண் கனகம்மாவின் உரிமைக்காரர்கட்குரிய ஆதனம், மேற்கு ஒழுங்கை தெற்கு விசுவலிங்கம் கைம்பெண் தங்கம்மாவிற்குரிய ஆதனம் இதடங்களும்.

யாழ்ப்பாணம் 1970-ம் ஆண்டு தை மீ 4-ம் திகதி
239 ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்

இ. சு. தர்மரத்தினம்
கொம்மிஷனர் விலைமதிப்பாளர்.
எம். 370 16—1—70